திசம்பர் - 2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

# செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 2


விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




**சிவநெறிச் செல்வர் பொன். பாண்டித்துரைத் தேவர் நினைவு நூற்றாண்டு தின விழாவில் (2.12.2011) கலந்து கொண்ட குருமகா சந்நிதானங்களுடன் தமிழ்ச் சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் கல்லூரிச் செயலர் இரா. குருசாமி அவர்கள்.**

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 2 திருவள்ளுவர் ஆண்டு 2042

திசம்பர் 2011




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| புதுக்கவிதைகளில் பெண்ணுரிமையும் மீறலும் | து. விஜயகுமார் | 4 |
| வாழ்க்கைக் கணக்கு! | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 10 |
| சுஹறியது சுஹறல் | ஆறுவிரல் ஐம்பெறி | 11 |
| நற்றிணையில் காணலாகும் இயற்கைப் புனைவுகள் | த. செந்தமிழ்ச் செல்வன் | 13 |
| தொல்காப்பியம் சுட்டும் அரசியல் நிலை | க. முருகேசன் | 17 |
| குறுந்தொகையில் ஒக்கூர் மாசாத்தியாரின் தலைவி கூற்றுப் பாடல்கள் | இரா. கலைச்செல்வி | 21 |
| திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள் | சித்தாந்த நன்மணி முனைவர். கா. அரங்கசாமி | 24 |
| வழங்கலும் துய்த்தலும் | புலவர் சி. பாண்டுரங்கன் | 31 |
| உரைவேந்தரும் உரைமரபுகளும் | சி. ஆறுமுகம் | 33 |
| சுற்றுச் சூழல் | கவிஞர் அ. கனகசபாபதி, எம்.ஏ., பி.எட்., | 38 |

# இதழ் மணம்

## அன்புடையீர்,
## செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

அன்புடையீர்,

திசம்பர் மாதச் செந்தமிழைத் தங்கள் கைகளில் தவழ விடுவதில் பெருமையடைகிறோம்.

கு. விசயகுமார் அவர்களின் "புதுக்கவிதைகளில் பெண்ணுரிமையும், மீறலும்" என்ற கட்டுரை, பெண்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகள் பெண்களின் விருப்பத்தோடும், வெறுப்போடும் எப்படியெல்லாம் மீறப்படுகின்றன என்பதை விளக்குகிறது.

தொல்காப்பியமும், நன்னூலாரும் சொன்ன நூலுக்குரிய பத்துக் குற்றங்களுள், கூறியது கூறல் சில இடங்களில் குற்றமாகாது என்ற கருத்து ஆறுவிரல் ஐம்பொறி அவர்களால் குறட்பாக்களின் மேற்கோளோடு விளக்கப்பட்டிருக்கிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை இயற்கை சில வர்ணனை நற்றிணையில் இலக்கிய உத்திப் பின்புலமாகக் கவிஞர்களால் எவ்வாறு புனையப்பட்டுள்ளது என்பதைத் தா. செந்தமிழ்ச் செல்வன் அவர்கள் நற்றிணையில் காணலாகும் இயற்கைப் புனைவுகள் என்ற கட்டுரை வழித் தந்து மகிழ்விக்கிறார்.

படையும், கொடியும், குடையும், முரசும், புரவியும், களிறும், தேரும் காட்டிய தொல்காப்பியர் காலத்து அரசியல் நிலையைப் பூண்டி முருகேசன் அவர்கள் தன்னுடைய கட்டுரையில் தெளிவுபடுத்திப் பண்டைய தமிழர்களின் அரசியல் வாழ்வை விளக்கியிருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

மூத்த அறிஞர் கா. அரங்கசாமி அவர்கள் நவீனப் பரிமேலழகராக மாறி திருக்குறளின் கோட்பாட்டினைத் தனக்கே உரிய தனித்தன்மையோடு விளக்கி இருக்கும் விதம் நம்மை வியப்பிற்கு ஆளாக்குகிறது.

இன்பத்தைப் பகிர்ந்து கொண்டால் இரண்டு மடங்காகும்; துன்பத்தைப் பகிர்ந்து கொண்டால் அது பாதியாகக் குறைந்து விடும் எனும் கருத்தை மையப்படுத்தி "வழங்கலும், துய்த்தலும்" எனும் கட்டுரையை வழங்கி நம்மைத் துய்க்க வைக்கும் புலவர் சி. பாண்டுரெங்கன் அவர்கள் பாராட்டுற்குரியவர்.

உரைவேந்தர் ஔவை சு. துரைச்சாமிபிள்ளை அவர்களின் உரை மரபுகளை அவர்தம் நற்றிணை ஐங்குறுநூறு உரைகளின் வழி சிங்கப்பூர் ஆறுமுகம் அவர்கள் சிறப்புறத் தந்து இம்மாத இதழைச் செழிப்பூட்டுவதோடு கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் "வாழ்க்கைக் கணக்கு" கவிதையும், கவிஞர் கனகசபாபதி அவர்களின் "சுற்றுச்சூழல்" கவிதையும் மரபுக் கவிதையாக மலர்ந்து இம்மாத இதழுக்கு வளம் சேர்ப்பதை வாசகர்களுக்கு வழங்கி மகிழும் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தார் சார்பில்,

**முனைவர் க. சின்னப்பா**

இனி நீங்களும் இதழும்....

# புதுக்கவிதைகளில் பெண்ணுரிமையும் மீறலும்

கு. விஜயகுமார்
அண்ணாமலை நகர்

மனித உரிமைகளில் பெண்ணுரிமை உலக அரங்கில் விவாதம் செய்யப்பட்டு வருகின்றது. ஆணுக்குப் பெண் சரி நிகரே என்ற தாரக மந்திரம் உலகெங்கும் இன்று ஒலிக்கின்றது. இருப்பினும், அது முழுமையான வெற்றி எனக் கூறவியலாது. பெண்ணுரிமைக் குறித்தச் சிந்தனைத் தமிழ் இலக்கியங்களிலும் பேசப்படுகின்றன. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனப் பேசும் வள்ளுவம் தொடங்கிய மனித உரிமை முழக்கம் இன்று வரையில் பேசிக் கொண்டே இருக்கின்றோம். இத்தகையப் பெண்ணுரிமைப் பற்றிப் புதுக்கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளக் கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்ணியமும் பெண்ணிய இயக்கப்பரவலும்

பெண்ணியம் என்பது உலக அளவில் வளர்ந்து காணப்படுகின்ற மிகச் சிறந்த இயக்கமாகும். பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்லாமல் அவை சமூகத்தையே மாற்றி அமைக்க முயல்வதாகும் என்பார் சார்வட்பன்ச்.

பெண்ணியம் என்ற இயக்கம் ஒரு நீண்ட வரலாறுடையது. இந்த இயக்கத்தின் வித்து கி.பி. 1400 ஆண்டில் ஆரம்பமானது. கி.பி. 1789 வரையில் மூன்று நிலைகளை அடைந்த பெரும் இயக்கமாக வளர தொடங்கின. 1848 அமெரிக்காவில் நடந்த மாநாடு உலகப் பெண்ணிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். இதன் பிறகு எல்லா நாடுகளிலும் இவ்வியக்கம் பரவத் தொடங்கின.

பெண்களின் உரிமைப் பிரச்சனை அடிப்படையிலான போராட்டத்தை முன்னெடுக்கும் பெண்ணியம் பல வகையில் உள்ளன. அவை 1. தாராளப் பெண்ணியம், 2. சமதர்மப் பெண்ணியம், 3. தீவிரவாதப் பெண்ணியம்,

4. மார்க்சியப் பெண்ணியம், 5. பண்பாட்டுப் பெண்ணியம், 6. சோலிஸப் பெண்ணியம் என்பனவாகும்.

## பெண்ணுரிமைச் சட்டங்கள்

பெண்களுக்கான அடிப்படை உரிமைகளைச் சட்டம் வழங்கும் பொழுதும் இந்தியாவில் பல பகுதிகளில் இன்றும் பெண் சிசு கொலைகள் நடைபெறுகின்றன. உயிர் வாழும் உரிமை பிறந்த சில நாட்களிலேயே பறிக்கப்படுகிறது. பெண்ணுக்கு இழைக்கப்படும் சமூகக் கொடுமைகள் அவர்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பதாக உள்ளது. ஆண், பெண் சமத்துவத்தை நிலைநிறுத்துவதற்கும் பெண்களின் நியாயமான உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் இந்தியாவில் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில,

1. *சிறப்புத் திருமணச் சட்டம்* - 1954, 2. இந்து *திருமணச் சட்டம்* - 1955, 3. இந்து வாரிசு உரிமைச் சட்டம் - 1954, 4. குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் - 1956, 5. குழந்தைப் பேறுச் சலுகைகள் சட்டம் - 1961, 6. வரதட்சணை ஒழிப்புச் சட்டம் - 1961 7. சம ஊதியச் சட்டம் - 1976, 8. குடும்ப *நீதிமன்றங்கள் சட்டம் - 1984, 9. கேவலமான முறையில் பெண்களை* உருவகப்படுத்தலுக்கு எதிரானச் சட்டம் - 1987, 10. உடன்கட்டை ஏறுதல் தடுப்பு விதி - 1988, 11. உடன்கட்டை ஏறுதல் (திருத்தம்) சட்ட விதி - 1988, 12. பெண்களுக்கான தேசிய பொறுப்பாண்மைக் குழுச்சட்டம் - 1990 இந்திய *கிறித்துவர்கள் திருமணச் சட்டம்* - 1937, இஸ்லாமிய பெண்கள் மணமுறிவின் பாதுகாப்பு உரிமைகள் சட்டம் - 1986, திருமணமான பெண்களின் சொத்துரிமைச் சட்டம் - 1874, குடும்ப வன்முறைச் சட்டம் - 2005 ஆகியனவாகும்.

## பெண்ணுரிமை முழக்கம்

*மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்"* (பாரதியார் கவிதைகள், ப. 192)

என்று பாரதி பெண்ணுரிமையைப் போற்றுகின்றார். பெண்கள் தங்களுக்கென்று எவ்விதமான உரிமைகளையும் பெறாமல் இழிவுப்படுத்தப்படுகின்றனர். பெண்ணை அடிமையாகவும், இழிவாகவும்

நடத்துவதோடு அல்லாமல் போகப் பொருளாகவும் ஆணாதிக்க சமுதாயம் கடைப்பிடிக்கின்றது. இருப்பினும், இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் தங்களுக்கென்ற தனி உரிமையைப் பெறுவதோடு எல்லா துறைகளிலும் சமூகத்தில் சம உரிமையைப் பெற்றும் அதனை நிலைநிறுத்தப் போராடி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பெண்ணடிமை ஒழிப்பு

பெண்கள், திருமண வயதை உயர்த்துவதால், வயது வந்த பின் மணஞ்செய்தல், வரதட்சணை ஒழிப்பு, பெண்ணுக்கும் சொத்தில் பங்கு ஆகியன பெண்ணுரிமையை முதன்மைப்படுத்துவதோடு பெண்ணடிமை ஒழிப்பதற்கும் சிறந்த சீர்த்திருத்த எண்ணங்களாகும்.

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் இந்தியாவே பெண்களை அடிமையாக்கி வைத்திருப்பதில் முதற்பரிசு பெறக் கூடியதாயிருக்கிறது என்கிறார் குருநாதன். இதற்கு முக்கியக் காரணம் பெண்களுக்குக் கல்வி இல்லாமலிருப்பதும் ஆணாதிக்கப் போக்கு மிளிர்ந்து இருப்பதும் காரணமாக அமைகின்றது.

## சமுதாயத்தில் பெண்கள் நிலை

போற்றப்படவும், மதிக்கப்படவும் கூடிய பெண்கள் இச்சமுதாயத்தில் வாழ்கின்ற காலத்தில் பல அவலங்களைச் சந்திக்கின்றனர். பல கொடுமைகளுக்கு ஆளாகுகின்றனர். ஒரு நாட்டின் முன்னேற்றம் பெண்களை மையமிட்டே உள்ளது.

*"ஏடி அகலிகை*
*எப்போதடி பெண்ணாவாய்*
*கானகத்தில் அன்று*
*கதைக் கல்லாய் கிடந்த நீ*
*சமூகச் சந்ததியில் இன்று*
*சதைக் கல்லாய் இருக்கின்றாய்"*

(வைரமுத்து கவிதைகள் ப. 164)

பெண்களை வெறும் போகப் பொருளாகவே ஆண்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்று வருந்துகின்றார் வைரமுத்து. உணர்ச்சியின்றி சுய விருப்பு, வெறுப்புகளை ஓரம்கட்டி விட்டு, ஆணாதிக்கச் சமுதாயத்தில் நாளும் உழைத்து, உயிருள்ள கல்லாகவே பெண்கள் இருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது.

## சமுதாயத்தில் பெண்கள் பெறும் பட்டங்கள்

எந்தத் துறையிலும் பெண்களை முன்னுக்குக் கொண்டுவரச் சமூகம் சம்மதிக்கவிலிலை. வரதட்சனை கொடுமை, மாமியார் கொடுமை, பாலியல் கொடுமை போன்றவற்றால் காலங்காலமாகப் பெண்கள் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். பட்டங்கள் பெற்றுச் சட்டங்கள் செய்ய வேண்டிய பெண்களைப் படிக்க வைக்காமலும் வீடுகளில் அடிமைகளாய் நடத்தும் ஆண்கள் பெண்களுக்குக் கொடுக்கும் பட்டங்களும் ஏராளம்.

*"காதலித்தவனைக் கைப்பிடித்தால் 'ஓடுகாலி'*
*கைப்பிடித்தவன் கைவிட்டால் 'வாழாவெட்டி'*
*கட்டில் ஆடியும்*
*தொட்டில் ஆடாவிட்டால் 'மலடி'*
*கட்டியவன் மாண்டு போனால் 'விதவை'*
*அதென்னவோ*
*பாவையருக்கு மட்டும்*
*படிக்காமலேயே இத்தனைப் பட்டங்கள்"* (மீரா கவிதைகள் .ப. 24)

பல்கலைக்கழகங்களை விட இந்தச் சமூகம் பெண்களுக்குத் தரும் பட்டங்களைச் சுமந்து நெஞ்சம் கனத்துக் கொண்டு வாழும் பெண்கள் நாட்டில் எல்லா இடங்களிலும் வாழ்கின்றனர்.

*"அம்மா, சகோதரி, காதலி, மனைவி, மகள்*
*வைப்பாட்டி வேசி என்று*
*எங்கள் விளையாட்டிற்கான பொம்மையாகவே*
*உன்னை ஆக்கினோம்."* (பால்வீதி. ப. 72)

என்று அப்துல் ரகுமான் குறிப்பிடுவதில் பெண்களுக்கு உரிமைகள் அளிக்கப்படவில்லை என்பதும் அவரது உரிமைகள் மறுக்கப்படடுள்ளது என்பதையும் அறியமுடிகின்றது.

## குடும்பத்தில் பெண்களின் இன்னல்கள்

கணவர் மனைவி நடத்தும் இல்லற வாழ்க்கையில் கணவனுடனும், குடும்ப உறவுகளுடனும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும் பெண்கள், அவர்களின் கனவுகளைப் புதைத்துக் கொண்டு, உணர்வுகளை நசுக்கும் குடும்பத்தில் பெண்கள் படும்பாடு கொடுமையானது.

*"பழமொழிகளைச் சொல்லி*
*பய முறுத்தும் மாமியார்*
*பொன்மொழிகளைச் சொல்லி*
*புண்படுத்தும் மாமனார்*
*தன்மொழிகளைச் சொல்லித்*
*தடுமாறும் கணவன்"* (மு. மேத்தா கவிதைகள். ப. 236)

என்று பெண்கள் உணர்ச்சியற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் அவலநிலையை மு. மேத்தா சுட்டிக் காட்டுகிறார்.

## பெண்ணுரிமைப் பறிப்பும் மீறலும்

உரிமை என்பது எல்லோர்க்கும் பொதுவானது. கண்ணியத்துடனும், சுதந்திரமாகவும் வாழ அனைவருக்கும் உரிமை உண்டு. இதைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை. 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' எனும் வள்ளுவனின் வாக்கும் பெண்மையைப் போற்றுவதோடு அல்லாமல் அவர்களின் உரிமைகளைப் பறிக்க கூடாது, மதிக்கப்பட வேண்டும் என்கிறது. ஆனால், சமுதாயத்திலும், அலுவலகத்திலும், குடும்பத்திலும் பெண்களின் உரிமைகளைப் பறிக்கின்ற போதும், மறுக்கின்ற போதும் பெண் உரிமை மீறப்படுகின்றன.

*"இன்று வரை அம்மா*
*கதவுகளின் பின்னிருந்துதான்*
*அப்பாவோடு பேசுறாள்*
*கடைசி வரை அப்பாவும்*

*மறைந்தே போனார்*
*மனசுக்குள் தூர் எடுக்காமலேயே"* (பட்டாம் பூச்சி விற்பவன். ப. 9)

கணவனுடன் மனைவி நேரிடையாகப் பேசக்கூட முடியாத நிலை இன்னும் இருக்கும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறார் நா. முத்துகுமார். படுக்கையை மட்டும் பகிர்ந்து கொள்ளும் கணவன் மனைவிக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை; உணர்வை; உரிமையை அளிக்கவில்லை. இருப்பினும், சமுதாயத்தில் பெண்கள் தங்கள் உரிமைகளைக் கேட்டுப்பெறவும், அவ்வுரிமையைக் காத்துக் கொள்ளவும் போராடி வருகின்றனர்

*"இன்று*
*ஆண்களை விட பெண்கள்*
*அறிவில் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள்*
*அறிவிலும் அழகிலும்*
*அன்பிலும் அடக்கத்திலும்*
*பெண்ணே உயர்ந்தவள்"* (சுமைதாங்கி. ப. 78)

என்னும் பரிதா பானுவின் கவிதைகளின் ஆண்களை விட, அறிவு, அடக்கம், அன்பு, அழகு போன்றவற்றில் உயர்ந்தவர்களாகச் சுட்டிக்காட்டுவதில், பெண்களின் வளர்ச்சியைக் காணமுடிகின்றது.

## முடிவுரை

பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதும் அதனைக் காப்பதிலும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். உலக அரங்கில் பெண்கள் தலைநிமிர்ந்து வாழ அவர்களின் உணர்வுகளை மதித்து நடத்தலே அவர்களுக்குச் செய்யும் மாபெரும் சக்தியாக இருக்கும்.

சமுதாயம் காலந்தோறும் பெண்களுக்குக் கொடுத்திருந்த இடத்தையும் விதித்த விதிகளையும் உடைத்தெறிந்து புரட்சிப் பெண்ணாய், புதிய சமுதாயம் உருவாக்கப் புறப்பட்டு வருவதே பெண்களின் விடுதலைக்கான வழியாகும்.

# வாழ்க்கைக் கணக்கு!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

சுறு சுறுப்பைக் கூட்டுங்கள்! வெற்றி கிட்டும்!
சோம்பலினைக் கழியுங்கள்; நலங்கள் கிட்டும்!
திறமையினைப் பெருக்குங்கள்; பெருமை கிட்டும்!
செயல்முறையை வகுத்திடுங்கள்; செழுமை கிட்டும்!
அறநெறியைக் கூட்டுங்கள்; அமைதி கிட்டும்!
அழுக்காற்றைக் கழியுங்கள்; அன்பு கிட்டும்!
சிறப்புகளைப் பெருக்குங்கள்; மேன்மை கிட்டும்!
சீர்த்திட்டம் வகுத்திடுங்கள்; உயர்வு கிட்டும்!

நல்லுழைப்பைக் கூட்டுங்கள்; செல்வம் கிட்டும்!
நரித்தனத்தைக் கழியுங்கள்; நட்பு கிட்டும்!
கல்வியினைப் பெருக்குங்கள்; அறிவு கிட்டும்!
காலத்தை வகுத்திடுங்கள்; பயன்கள் கிட்டும்!
சொல்லாற்றல் கூட்டுங்கள்; புகழ்ச்சி கிட்டும்!
சுயநலத்தைக் கழியுங்கள்; உறவு கிட்டும்!
பல்லுதவி பெருக்குங்கள்; பரிவு கிட்டும்!
பயன்வாழ்வை வகுத்திடுங்கள்; இன்பம் கிட்டும்!

புன்னகையைக் கூட்டுங்கள்; பொலிவு கிட்டும்!
பொறாமையினைக் கழியுங்கள்; மகிழ்ச்சி கிட்டும்!
நன்மைகளைப் பெருக்குங்கள்; இனிமை கிட்டும்!
நல்வாழ்வை வகுத்திடுங்கள்; வளமை கிட்டும்!
இன்சொல்லைக் கூட்டுங்கள்; ஏற்றம் கிட்டும்!
இழிசெயலைக் கழியுங்கள்; உவகை கிட்டும்!
நன்னெறியைப் பெருக்குங்கள்; அமைதி கிட்டும்!
நற்பாதை வகுத்திடுங்கள்; மாட்சி கிட்டும்!

# கூறியது கூறல்

ஆறுவிரல் ஐம்பெறி
வீரசோழபுரம்

பத்து அழகுகளைக் கூறும் நன்னூலார் பத்துக் குற்றங்களையும் கூறியுள்ளார். பத்துக் குற்றங்களுள் கூறியது கூறல் என்பது ஒரு குற்றமாகும்.

12. குன்றக் கூறல் மிகைப்படக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்...

கூறியது கூறல் குற்றம் என்ற இலக்கண விதிக்கு அனைவரும் அறிந்த ஒரு விதிவிலக்கு உண்டு. 'கூறியது கூறல் குற்றமல்ல வேறொரு பொருளை விளக்குமாயின்' என்பதே அவ்விதிவிலக்காம்.

திருவள்ளுவர் சில இடங்களில் கூறியதைக் கூறியுள்ளார். இவ்விதிவிலக்கைப் பயன்படுத்திக் கூறியது கூறல் குற்றமல்ல என்பதையும் நிறுவியுள்ளார்.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து** குறள் -126.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து** குறள் - 398

இவ்விரு குறட்பாக்களின் ஈற்றடிகளைக் காண்க. ஈற்றடிகள் இரண்டும் ஒன்றியிருப்பதை அறிக. இவ்விரு குறட்பாக்களில் பொருள்கள் வேறு வேறாக உள்ளதை நோக்குக. ஒரு குறள், ஐந்து புலன்களை அடக்க வேண்டும் என்ற பொருளைப் புகல்கின்றது. மற்றொரு குறள், கல்வி கற்க வேண்டும் என்ற பொருளை மொழிகிறது. எனவே 'வேறொரு பொருளை விளக்குமாயின் கூறியது கூறல் குற்றமல்ல' என்ற விதிவிலக்குப் படி இவ்விரு குறட்பாக்களிலும் ஈற்றடிகள் ஒன்றியிருப்பது குற்றமல்ல என்பதை உணர்க.

இது போன்று ஈற்றடிகள் ஒன்றிய குறட்பாக்கள் சிலவற்றை இங்குக் காண்போம்.

| | | |
|---|---|---|
| துன்ப முறுதல் இலன் | - | 628, 629. |
| மெய்ப்பொருள் காண்பதறிவு | - | 423, 355. |
| உட்பகை உற்ற குடி | - | 887, 888. |
| ஏதம் படுபாக் கறிந்து | - | 136, 164. |
| இனநலம் ஏமாப் புடைத்து | - | 458, 459. |
| ஏதிலர் என்னுமிவ் வூர் | - | 1129, 1130. |
| தீரா இடும்பை தரும் | - | 508, 510. |
| பண்புடைமை என்னும் வழக்கு | - | 991, 992. |
| ஏதம் பலவுந் தரும் | - | 275, 884, 885. |
| கண்ணோட்ட மில்லாத கண் | - | 573,574. |
| செய்யாமை மாசற்றார் கோள் | - | 311, 312. |
| கோடாமை சான்றோர்க் கணி | - | 115, 118. |

இக்குறட்பாக்களில் ஈற்றடிகள் ஒன்றியுள்ள போதிலும் ஒரு குறளுக்கு ஒரு குறள் பொருள் வேறுபடுதலை ஆய்ந்து. அறிக. தெய்வப் புலவர் விதிவிலக்கைப் பயன்படுத்திய முறையை உன்னி உன்னி இன்புறலாம். அவரைப் போற்றிப் போற்றி மகிழலாம்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை என்ற கவிமாமன்னன் பாரதியாரின் பாடலில் வாழும் முப்புலவர்களுள் சிறந்தவர் பொய்யா மொழியே ஆவார். சிலம்பில் பெரும்பாலும் அகவல். கம்பரில் விருத்தம். அகவலுக்கும் விருத்தத்திற்கும் ஒரு சில விதிவிலக்குகள் உண்டு. விதிவிலக்கே இல்லாத குறள் வெண்பாவால் நூல் முழுவதும் இயற்றிய தெய்வப் புலவரே சிறந்தவர், உயர்ந்தவர், ஒப்பற்றவர்.

# நற்றிணையில் காணலாகும் இயற்கைப் புனைவுகள்

து. செந்தமிழ்ச் செல்வன்
மதுரை

பண்டையத் தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியங்கள் தனிப்பட்ட சில கவிதை மரபுகளையும் தமக்கெனச் சில தனிச் சிறப்புகளையும் கொண்டவை. சங்ககாலத் தமிழர் இயற்கையோடு இயைந்த இறைவாழ்வு வாழ்ந்தனர். இயற்கையின் எழில் நலங்களையெல்லாம் நுட்பமாகக் கண்டு களித்தனர் சங்கப் புலவர் பெருமக்கள். தாம் கண்டு மகிழ்ந்த இயற்கை ஓவியங்களை மனதுக்கு இனிய காட்சியாகத் தம் பாடல்களில் படம் பிடித்தனர். நற்றிணையின் காணலாகும் ஐந்திணை இயற்கை ஓவியங்கள் குறித்து இங்குக் காணலாம்.

## குறிஞ்சி

குன்றுகள் சூழ்ந்த மலைச் சாரல் : மரக்கிளையில் தேனிக்களால் அமைக்கப்பட்ட தேனிறால்கள் தொங்குகின்றன. பெரிய பெரிய பலாப்பழங்கள் நன்றாகப் பழுத்துக் கிளைகளில் தொங்குகின்றன. வாழை மரங்கள் பழங்களைக் குலைகுலையாய்ப் பழுத்துள்ளன. மலையிலிருந்து வெண்மையாக விழுகின்ற அருவி மலையைப் போலக் காட்சியளிக்கின்றது. மலைச் சாரலின் நெல், புல், வரகு, சாமை, திணை, பயறு, கொள்ளு, எள்ளு, சோளம், கம்பு, போன்ற பதினெட்டு வகையான கூலங்களும் விதைக்கப்பட்டுப் பொலிந்துள்ளன. எக்காலத்தும் குன்றாத வளப்பம் உடையதாக மலை விளங்குகின்றது.

*'பிரசம் தூங்க பெரும் பழம் துணர,*
*வரைவெள் அருவி மாலையின் இழிதர,*
*கூலம் எல்லாம் புலம்பு உக, நாளும்*
*மல்லற்று அம்ம, இம் மலை கெழு வெற்பு'* (நற். 93)

என்று குறிஞ்சி காட்சியைப் பாட்டோவியமாக ஆக்கியுள்ளர் மலையனார் என்னும் சங்கச் சான்றோர்.

## முல்லை

கடத்தற்குரிய காட்டு வழி : இந்த வழியில் வெள்ளை ஆடையை விரித்துப் போட்டதைப் போன்று மாலை வெய்யில் காய்கின்றது. கடல் நீரையுண்ட சூல்கொண்ட மேகம் தான் பெற்ற சூல் தாங்க மாட்டாமல் மழைத்துளிகளைச் சிதறிற்று காட்டுவழி முழுவதும் பிடவும். கொன்றையும், காந்தளும் மலர்ந்தன. மழைபெய் மண்வாசனை பூமியிலிருந்து 'கம்' என வீசிற்று.

*"நீர் அற வறந்த நிரம்பா நீள் இடை*
*துகில் விரித்தன்ன வெயில் அவிர் உருப்பின்,*
*அஞ்சுவரப் பணிக்கும் வெஞ் சுரம் இறந்தோர்*
*தாம் வரத் தெளிந்த பருவம் காண்வர*
*இதுவோ?' என்றிசின் மடந்தை - மதி இன்று*
*மறந்த கடல் முகந்த கமஞ்சூல் மா மழை*
*பொறுத்தல் செல்லாது இறுத்த வண் பெயல்*
*கார் என்று அயர்ந்த உள்ளமொடு, தேர்வு இல -*
*பிடவமும், கொன்றையும், கோடலும் -*
*மடவ ஆகலின், மலர்ந்தன பலவே.* (நற் -99)

என முல்லை நிலக்காட்சியைக் கண்முன் நிறுத்திகின்றார் புலவர் இளந்திரையனார்

## மருதம்

அறுவடை முடிந்தது; அடித்துக் குவிந்திருகின்ற நெல்கூடுகள் மலையைச் செய்து வைத்தாற்போல் தேன்றுகின்றன. அடுத்தடுத்து விளைச்சலைச் செய்வதற்காக உழவன் உழது பயிரிடத் தொடங்கிவிட்டான். எருமைகள் பூட்டிய ஏர்களைக் கொண்டு விடியற்காலத்தில் உழுதொழில் செய்யப் புறப்பட்டான். இரவு முழுவதும் அவன் தூங்கவில்லை. காலையில் கரிய கண்களையுடைய வரால் மீன்களைப் பெரியப் பெரிய துண்டுகளாக

ஆக்கி சோற்றையும், குழம்பையும் ஒருசேரப் பிசைந்து வயிறு முட்டத்தின்று அரை மயக்கத்தில் அவன் செல்கின்றான். கூடவே நாற்று நடுவதற்காக உழத்தியர் செல்கின்றனர். வயலில் களைகளோடு களைகளாகக் கோரையும், நெய்தலும் வளர்ந்து கிடக்கின்றன. ( நற் 60 ) இவ்வாறு தூங்காலோரியார் மருதக் காட்சியைப் படம் பிடித்து மனதில் நிறுத்துகின்றார்.

## நெய்தல்

இடிபோல் ஒலித்து ஆரவாரிக்கின்றது பெரியக்கடல். அலைகடலில் மீன் பிடிக்கப் பரதவர் தயாராகின்றனர். வலிமையான கயிற்றால் பின்னப்பட்ட பெரிய பெரிய வலைகளைத் தோனியில் ஏற்றுகின்றார்கள். பெரிய ஆண் யானையை அங்குசத்தால் குத்திச் செலுத்தும் யானைப் பாகனைப் போல பெரிய பெரிய தோணிகளைக் கடலில் செலுத்த இழுத்துச் செல்கின்றனர். பெரிய கடற்கரை முழுவதும் ஞாழல் மரங்கள் சிறு சிறு மலர்களைப் பூத்துக் குலுங்குகின்றன. அகன்ற மணற் பரப்பில் கடற்கரை கானல் சோலையில் புன்னையின் நுண்மையான மகரந்தப் பொடி கீழைக்காற்றால் மோதப் பெற்றுப் பரக்கின்றது. அந்த மகரந்தத் தூள் குருகின் வெண்மையான முதுகில் படிகின்றது. கடற்கரை ஓரத்தில் கண்டல் மரங்கள் உயிர் வேலியைப் போல் வளர்ந்துள்ளன. இவ்வாறு கடற்கரை இயற்கைக் காட்சியைக் கவிதைச் சித்திரமாகச் சித்திரிகின்றார் புலவர் உலோச்சனார். (நற் 63)

## பாலை

முதுவேனிற் காலம்; வெய்யில் வாட்டுகின்றது! அசையக்கூட முடியாமல் வெயில் தாங்கமாட்டாத ஓந்தி வழலை என்னும் பாம்பு தன் துணையாகிய பெண் பாம்புடன் வறட்சியுற்றுக் கிடக்கின்றது. வாட்டப்பட்ட மரலின் இளமடல் போல் இக்காட்சி தோன்றுகின்றது. குன்றினை அடுத்த காட்டு வழியில் வேட்டுவச் சேரி உள்ளது. இதற்குப் பக்கத்தில் பெரிய கிணறு காணப்படுகின்றது. கேணியில் ஆநிரை உண்பதற்காக வைத்துள்ள தண்ணீரை, பிற விலங்குகள் வந்து உண்ணாதவாறு வில் போன்ற ஒன்றை வைத்து வேட்டுவர்கள் மூடி வைத்திருப்பர். ஆண்யானை இந்த விற்பொறியைக் கோபத்தோடு முறித்துப் போடும்; பின்னர் தன்னுடைய இளம்பிடியும் கன்றும் வந்த அந்த நீரை உண்பதைக் கண்டு மகிழும்.

இத்தகைய காட்சிகள் தலைவன் செல்கின்ற பாலை வழியில் அவன் கண்ணையும், கருத்தையும் கவரும்.

காய்ந்த கொடிகள் அற்ற முட்கள் நிறைந்த இலவமரத்தின் விளங்கிய கிளைகள் நடுங்கும்படி வீசி அவை முறியுமாறு கொடிய காற்று மோதியடிக்கின்ற மூங்கிற்புதற் நெருங்கிய இடங்களில் கடும்நடை உடைய பெண்யானைகள் தன் கன்றுகளுடன் சேரமுடியாமல் வருந்தி நிற்கும், முற்றிலும் நீரும் நிழலும் இல்லாத நெடிய பாலை நிலம் இது என்று பாலையின் கொடுமையும், தன்மையும் விளக்கப்படுகின்றன. பின் வரும் முடத்திருமான் பாடல் வரிகளில் இதனைச் சுவைக்கலாம்.

*முளி கொடி வலந்த முள் அரை இலவத்து*
*ஒளிர் சினை அதிர வீசி, விளிபட*
*வெவ் வளி வழங்கும் வேய் பயில் மருங்கில்,*
*கடு நடை யானை கன்றொடு வருந்த,*
*நெடு நீர் அற்ற நிழல் இல் ஆங்கண்*
*அருஞ் சுரக் கவலைய என்னாய்* (நற் 105)

## முடிவுரை

பொதுவாகக் கவிஞர்களால் மனிதவாழ்வையும், இயற்கையையும் பிரித்துக் கவிதை படைக்க இயலாது. ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வொர்ஸ்வொர்த் சொல்லுவதுப் போல எல்லாமே இயற்கையினிடத்து தான் பெறப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள அகப் பாடல்களில் முதற்பொருளாகவும், கருப்பொருளாகவும் மனித வாழ்விற்குரிய பொருளாகத் தவிர்க்க முடியாத இடத்தை இயற்கை பெறுகின்றது. அவ்வாறே நற்றிணையிலும் இயற்கை வருணனையாக, இலக்கிய உத்தியாகப் பின்புலமாக பல்வேறு நிலைக் கலங்களில் கவிஞர்களால் புனையப்பட்டுள்ளது.

# தொல்காப்பியம் சுட்டும் அரசியல் நிலை

க. முருகேசன்
பூண்டி

இலக்கணச் செறிவும், இலக்கிய வளமும் சான்று இன்று வரை நடைமுறையில் இலங்கி வரும் தொன்மை வாய்ந்த மொழி தமிழ் மொழியாகும். அத்தகைய சீர்சால் தமிழ்மொழியின் பழைமையான இலக்கண நூல்களுள் ஒன்றான தொல்காப்பியம் காட்டும் அரசியல் நிலையினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பழந்தமிழகம்**

பழந்தமிழகத்தைக் கி.மு.1465லிருந்து மூன்று வேந்தர்கள் ஆண்டு வந்தனர். தமிழகத்தின் எல்லையைச் சிறப்புப்பாயிரம் பாடிய "பனம் பாரனார்"

*வடவேங்கடம் தென்குமரி*
*ஆயிடைத்*
*தமிழ் கூறும் நல்லுகத்து!*

என்கிறார். "மூந்நீர் வழக்கம்" என்று தொல்காப்பியம் கூறுவதால் மூன்று பக்கம் கடல் சூழ்ந்த இடம் என்று உணரற்பாலது. மேலோர்களாகிய மூவேந்தர்களைப் பின்னர் வந்த இலக்கியங்கள் மூலமாகச் சேரர், சோழர், பாண்டியர் என்று அறிகிறோம். மூவரில் ஒருவருக்கொருவர் பகைமைப் பாராட்டிப்போர் புரியும்போது, அடையாளத்துக்காக 'பனங்குறுத்து', 'ஆத்திமாலை', 'வேப்பமாலை' அணிந்து வருவர். இதனை,

*வேந்திடை தெரிதல் வேண்டிஏந்து புகழ்ப்*
*போந்தை வேம்பே ஆர்என் வரூஉம்*
*மாபெருந் தானையர் மலைந்த பூவும்*

என்ற நூற்பா வடிவில் அடையாளப்படுத்துகிறார். மேலும் நாட்டுச் சின்னங்கள் அப்போது அமைக்கப்படவில்லை.

## அரசர்க்கு உரியவை

*படையும் கொடியும் குடையும் முரசும்*
*நடைநவில் புரவியும் களிறும் தேரும்*
*தாரும் முடியும் நேர்வன பிறவும்*
*தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய*

என நால் வகைப் படையும் தனக்கென ஒரு கொடியும், வெண் கொற்றக் குடையும், முரசும், குதிரையும், யானையும், தேரும், தனக்கென ஒரு மாலையும், தலையில் அணியும் முடியும், பிறவும் செங்கோல் அரசர்க்கு உரியவையாக தொல்காப்பியர் வரையறுக்கிறார்.

## காவல் பொருள் வயிற் பிரிவு

சிறப்புமிக்க தெய்வ வழிபாடு விழாக்கள் நன்கு நடைபெறவும், முல்லை முதல் எல்லா நிலங்களிலும் பிழைபடச் செயல்கள் நடவாமை வேண்டியும், நாட்டின் நல்ல பல செயல்பாடுகள் சரிவர முடியவும், வேந்தன் தகுந்த மக்களைப் பிரித்துக் காவல் பணிக்கு அனுப்புகிறான். இதனை,

*மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய*
*முல்லை முதலாச் சொல்லிய முறையான்*
*பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்*
*இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே*

என்கிறார். மேலும்,

*மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே*

என்று வேந்தன் ஏவுதற்குக் காவல் பிரிவு அரசியலாளர்கள் முதலான நால் வகையோடும் உட்பட்டவர்களே. செய்தொழில் முறையான் இந்நால்வகை காட்டப்படுகிறது.

## பாங்கீடு

வேந்தர்கள் மக்களுக்கும், நாட்டிற்கும் ஒரு பெரிய காவலர் போலவே பணியாற்றுகிறார்கள். தமிழக மன்னர்களுக்குள் ஏதேனும் பிணக்கு நேர்ந்தால், முறைப்படி ஆநிரை கவர்தல் செய்கிறார்கள். நோயின்றிக்

கொண்டு வந்தவைகளைப் பங்கு வைத்தல், தானமாகக் கொடுத்தல் போன்றன நிகழ்கிறது. இதனை,

*நோயின்றி உய்த்தல் நுவல்வழித் தோற்றம்*
*தந்துநிறை, பாதீடு உண்டாட்டு கொடையென*
*வந்த ஈரேழு வகையிற்றாகும்*

எனக் கிடைக்கும் செல்வம் பங்கிடப்படுவதால், பெருஞ்செல்வம் அரசனுக்குச் சேராது போகிறது. செல்வப் பெருமக்கள் என்ற பெரும் பிரிவு தமிழகத்தில் கிடையாது. வீரத்தின் விளைவாலான வெற்றியே கொண்டாடப் பெறுகிறது. ஒருவர் நாட்டை மற்றவர் கவர்ந்து கொள்வதில்லை. எப்போதுமே மூவர் தண்பொழில் நிலவுகிறது.

## வீரச்செயல்

புறத்திணையியலில் பல்வேறு திணை வழி நடைபெறும் பேரும் போர்களில் வீரமுடன் எதிர்கொள்ளும் சண்டைகளின் மறச்செயல்களைப் பற்றித்தான் கூறப்படுகிறது. இதனை,

*எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்*
*அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே*

என்கிறார். மேலும், அதன் கண் எங்கும் அரசுச் சூழ்ச்சி முறைகள் என்று கிஞ்சித்தேனும் இல்லை. மேலும்,

வீரமறச் செயல்களுக்கு அடிப்படை நிலை, புறமுதுகிட்டு ஓடாத, உடல் ஆற்றலும், மறவர் காணும் உன்ன மனநிலையுமாகும். பகைவரை ஒரு பொருளாகக் கருதாது பேராண்மையுடன் எதிர்ப்பதும்; பெரும்படையை அணைபோல ஒருவனே தாங்கும் பெருமையும்; அரசனைப் படைகள் மொய்த்தபோது தனியனாக முன்னனி சென்று வெல்லும் வேகமும்; அரசன் இருவர் போர் செய்யும்போது, ஒருவரோ, இருவருமேயோ வாள்புண் பெற்று அழியும் நிலையினும் யானையை எதிர்த்து ஏறும் பெருமையும்; பகைவர் நாணும்படித் தலைவரைக் குறித்து வஞ்சினம் கூறித் தம்முயிரைக் களப்பலியாக வழங்குவதும்; தகுதியுடன் வரும் சிறப்பு நோக்கித் தன் மறப்புண்ணைக் கிழித்து உயிர் துறப்பதுவும்; இறந்த கணவன் இறந்த வேல்கொண்டு களம் வந்து கண்ட மனைவி தன்னையும் மாய்த்துக்

கொள்ளுதலும்; சிறுவன் புறமுதுகிட்டான் எனக் கேட்டுத் தாய் வருந்துவதும் போன்றன மறச் செயல்களாம்.

## பன்னிரு வேளிர்கள்

*செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்*
*தம்குறிப் பினவே திசைச்சொல் கிளவி*

வேளிர்க்ள் (குறுநில மன்னர்கள்) தமிழகத்தில் பன்னிருவர் உண்டு. வேந்தர்கள், தானைத் தலைவர்கள் போன்று இவர்களும் ஏவல்கள் விடுப்பவர்களே. இவர்கள் வேந்தர்களின் நாடு சார்ந்து வேந்தர்களுக்கு உட்பட்டவர்களே. வேளிர்களுக்கு வில், வேல், வீரக்கழல், தலைக்கண்ணி, தார், ஆரம், தேர், வாள், இவை உரியவை என,

*வில்லும் வேலும் கழலும் கண்ணியும்*
*தாரும் மாலையும் தேரும் வாளும்*
*மன்பெறு மரபின் ஏனோர்க்கு உரிய*

என்கிறார். மேலும், வேளிர்கள் அளவுக்குச் செல்வமுடையோ-ராயிருந்தாலும் வணிகர், வேளாளர் போன்றோருக்கு மேற்கூறியவை கிடையாது என்கிறார்.

## முடிவுரை

பண்டைய தமிழர்கள் 3460 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழக வேந்தர்கள் அவர் தம்நாடுகளுக்கு வரைப்படம் வரைந்து பார்த்திருப்பது எண்ணி, எண்ணி வியக்கத்தக்கது. சோழனுக்காக, மலையமான் என்னும் வேளிர், வெளியிட்ட நாணயங்களின் முன்புறம்,சோழ நாட்டின் சின்னமாக இதன் இயற்கை அமைப்புகளான (Land Marks) மேற்குத் தொடர்மலை, தென்பெண்ணையாறு, காவிரியாறு, நீலகிரி மலைமுகடு, சேரநாடு புகும் வழியாகப் பாலக்காடு கணவாய் இத்தனையும் வரைப்படமாகக் காட்டி வெளியிடப்பட்டுள்ளன.

தற்காலப் புவியியல் படத்துடன் (Atlas) ஒப்பிட்டு பேருவகை எய்தும் நிலை பண்டைய அரசியலில் அமைந்திருந்ததை அறியலாம்.

# குறுந்தொகையில் ஒக்கூர் மாசாத்தியாரின் தலைவி கூற்றுப் பாடல்கள்

**இரா. கலைச்செல்வி**
புதுக்கோட்டை

## முன்னுரை

ஒக்கூர் மாசாத்தியார் சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் ஒருவர் ஆவார். குறுந்தொகை தவிர்த்த ஏனைய சங்க நூல்களான அகநானூறு புறநானூறு முதலிய தொகை நூல்களிலும் இவருடைய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. குறுந்தொகையில் இவருடைய பாடல்கள் ஐந்து (126, 139, 183, 220, 275) காணப்படுகின்றன. மூன்று பாடல்கள் தலைவி கூற்றிலும், இரண்டு பாடல்கள் தோழி கூற்றிலும் அமைந்து காணப்படுகின்றன.

## தலைவி கூற்றில் அமைந்த பாடல்கள்

சங்க அகப்பாடல்களை நோக்கும் பொழுது ஆண்பாற் புலவர்களின் தலைவி கூற்றுப் பாடல்களுக்கும் பெண்பாற் புலவர்களின் தலைவி கூற்றுப் பாடல்களுக்கும் இடையே வேறுபாடுகள் தென்படுகின்றன. அதாவது ஆண்பாற் புலவர்களின் தலைவி கூற்றுப் பாடல்கள் தலைவனின் புகழைப் பாடுவதாகவும் தலைவனைப் போற்றிப் புகழும் நிலையிலும் அமைந்து காணப்படுகின்றன. ஆனால் பெண்பாற் புலவர்கள் காட்டுகின்ற தலைவி கூற்றுப் பாடல்கள் ஒவ்வொன்றும் தலைவியின் துன்பத்தினை அதாவது, தலைவனைப் பிரிந்து வாடும் துயரத்தினையே வெளிபடுத்தி நிற்கின்றன. இங்க ஒக்கூர் மாசாத்தியாரின் தலைவி கூற்றுப் பாடல்களும் அத்தகையதொரு துயர வெளிப்பாட்டினைத்தான் பிரதிபலிக்கின்றன.

*"இளமை பாரார் வளம்நசை இச் சென்றோர்*
*இவணும் வாரார் எவண ரோஎனப்*
*பெயல்புறம் தந்த பூங்கொடி முல்லைத்*
*தொகுமுகை இலங்குஎயிறு ஆக*
*நகுமே தோழி நறுந்தண காரே"* (குறுந். 126)

மேற்கண்ட பாடல் தலைவி கூற்றில் அமைந்த பாடலாகும். தலைவி,

இளமைப் பருவம் வீணாகக் கழிவதை எண்ணித் தலைவனைப் பழித்துப் பேசுகிறாள் என்பது பாடலின் வெளிப்படையான கருத்தாக்கமாகும். தலைவன் பொருள் தேடிச் சென்றுள்ளான் என்பது தலைவிக்குத் தெரியும். இருப்பினும் தலைவி ஏன் தலைவனைப் பழித்துப் பேச வேண்டும். பொருள் தேடிச் செல்வோர் பருவம் குறித்துச் செல்வதுண்டு. அதுவே வழக்கமும் ஆகும். அதாவது கார்கால்த் தொடக்கத்தில் வந்துவிடுவர். மேற்கண்ட பாடல் காட்டும் தலைவன் கார்பருவம் வந்தும் வரவில்லை. வந்துவிடுவர். மேற்கண்ட பாடல் காட்டும் தலைவன் கார்பருவம் வந்தும் வரவில்லை. அதனால்தான் தலைவி தலைவனைப் பழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இங்குத் தலைவி தன்னுடைய இளமைப் பருவம்தான் முக்கியம் என்று கூறுவில்லை. பொருள் தேடிச்சென்றதையோ, பொருள் தேட வேண்டாம் என்றோ அவள் தடுக்கவுமில்லை. அவள் இல்லற வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது என்பதை உணராதவளும் இல்லை. பாடலில் தலைவி "எவணரோ" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறாள். அந்தச் சொற்றொடர் தலைவி, தலைவன் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாட்டை உணர்த்துவனவாகவும் இருக்கலாம். அல்லது பருவம் குறித்துச் சொன்றவன் பொருள் தேடிய பின்னர் பரத்தமை நாடிச் சென்றிருக்கக் கூடும் என்ற ஐயத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கலாம். அஃது அவளின் மனநிலையைப் பொறுத்து அமைவனவாகும். எப்படி இருந்த போதிலும் தலைவியானவள் முல்லைத் திணைக்கேயுரிய ஒழுக்க நிலையில் நின்று, பருவம் குறித்துச் சென்றோர் குறித்த பருவத்தில் வரவில்லையே என்று எண்ணி வருத்தமுறும் அவலத்தினை உணர முடிகிறது.

தலைவி கூற்றில் அமைந்த இன்னொரு பாடலையும் நாம் பார்க்க வேண்டும். இந்தப் பாடலில் வருகின்ற தலைவி, தலைவன் வருகைக்காகக் காத்திருக்கின்றாள்.

*"ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த*
*கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி*
*எயிறுஎன முகையும் நாடற்குத்*
*துயிற்துறக் தனவால் தோழிஎன் கண்ணே"* (குறுந் - 186)

தலைவன் சொல்லிச் சென்ற பருவம் வந்துள்ளது என்பதைத் தலைவி இயற்கையின் வழி உணர்ந்து கொள்கிறாள். அவன் வருகைக்காக உறங்காது விழித்திருப்பதனால் தான் உடல் மெலிவடைந்துள்ளேன்' என்ற செய்தியைத்

தலைவி உணர்த்துவதோடு, 'நாடன்' என்று தலைவனைக் குறிப்பிட்டுக் காட்டுகிறாள். தன்னால் விரும்பப் பெற்றவன் தான் வாழுகின்ற நிலத்துக்குரிய தலைவன் என்பதைப் பதிவு செய்து. அவன் ஒருபோதும் தன்னிலை தவறாதவன் என்பதை உள்ளிருத்திப் பேசுகிறாள். அப்படிப்பட்டத் தலைவன் வருகைக்காக அவள் உறங்காது விழித்திருந்த போதிலும் பருவம் த்வறியதனால் ஒருவிதமான மீறலுடன் தவிப்பு நிலையை தலைவி அடைகின்றாள் என்பதைப் பாடல் சுட்டிக் காட்டுகின்றது.

தலைவி கூற்றில் அமைந்த மாசாத்தியாரின் மற்றொரு பாடலும் தலைவன் சொல்லிச் சென்ற கார்பருவம் வந்துற்றும் தலைவன் வரவில்லை என்பதைக் காட்டித் தலைவியின் வாட்டத்தை முன்னிறுத்துகின்றது

*"பழமழைக் கலித்த புதுப்புன வரகின்*
*இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை*
*இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை*
*வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்*
*குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்*
*வண்டுசூழ் மாலையும் வாரார்*
*கண்டிசின் தோழி பொருட்பிரிந் தோரே"* (குறுந் – 220)

மூன்று பாடல்கள் காட்டுகின்ற தலைவர்களும் பருவம் தவறினவர்களாகவே இருக்கின்றனர். மூன்று பாடல்களும் தலைவியர்களின் மனநிலை வெவ்வேறு விதத்தில் வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளதை நாம் உணர முடிகிறது.

## முடிவுரை

ஒரு பாடலின் தலைவி, தலைவனைப் பழித்துப் பேசுகின்ற போக்குடையவளாகவும், மற்றொரு பாடலின் தலைவி, தலைவன் வரவுக்காகத் தவிப்பு நிலையில் காத்திருப்பவளாகவும், இன்னொரு பாடலின் தலைவி, தலைவன் வரவில்லையே என்ற ஏக்கத்தினை உடையவளாகவும் காணப்படுகின்றனர். மூன்று தலைவியர்களும் முல்லைத் திணைக்கேயுரிய ஒழுக்க நிலையில் நின்று, பின்னர், உடல் சார்ந்த ஒருவிதமான மீறலுக்கு உட்படுவதைக் காணமுடிகின்றது. பெண்பாற் புலவர்களின் தலைவி கூற்றுப் பாடல்களைப் பொறுத்தவரை அஃது அவர்களின் கூற்றாகவே / குரலாகவே கருத இடமுண்டு.

# திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள்

சித்தாந்த நன்மணி
முனைவர். கா. அரங்கசாமி
கோபி

## உ. திருக்குறளின் மையக்கருத்தாகிய கோட்பாட்டினை உணர்தல்

### முன்னுரை

இங்கு நாம் ஓர் உண்மையை முதலில் அறிதல் வேண்டும்.சொற்கள் எவ்வளவு முயன்றாலும் எண்ணங்களின் ஆற்றலை வெளிப்படுத்தாது. அதனால் தான் கருத்துமோதல்கள், முரண்கள், இடைவெளிகள் எற்படுகின்றன. பிழை உணர்தலும் நடக்கின்றன. மன நிலைகளைச் சொற்கள் சரியாகக் காட்டாமையால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. உண்மை நிலை புரியாமல் யோகின்றன. தொன்மம் என்ற புராணத்தின் தோற்றமே மனிதனின் இயலாமையே என்பர். கனவுலகின் - கருத்துலகின் மோதலே புராணம் ஆயிற்று. நிறைவேறாத ஆசைகளும் அதன் தோற்றக் காரணி. எனவே சொல்லும், பொருளும் காலம் இடந்தோறும் மாறுபட்டுள்ளன. சூழல்தோறும் முடண்பட்டன. துறை தோறும் துறை தோறும் சிக்கலைத் தோற்றுவித்தன.

தொல்காப்பியம் பல ஆயிரம் ஆண்டுகள் முன்னரே உரிச்சொற்கள் பற்றிப் யேசிடக்காண்க. ஒரு சொல் பல பொருளிலும், பல பொருள் ஒரு சொல்லிலும் வரக்காரணம் என்ன? மனிதமனம் உணர்வதைச் சொல்லில் வடிக்க இயலாமையே என்பதை நாம் நினைவில் நிறுத்த வேண்டும். அறிவு கூட இயற்கை அறிவு, செயற்கை அறியு, பட்டறிவு (அனுபவ அறிவு) தூயமெய்யறிவு என நான்கு வகையாகப் பிரிவு பட்டதும், அத்துடன் நூலறிவு, காரறிவு, இருட்டறிவு, புரட்டறிவு போன்ற இழிவுகளும் சேர்ந்து இன்றைய உலகினை ஆளக்காண்க. திருவள்ளவர் கூட மெய்யறிதல் என்று கூறாமல் மெய்யுணர்தல் என்று கூறியதன் நுட்பம் காண்க. தெய்வத்தைக் கூட அறிதல் எளிதன்று உணர்தல் எளிது என்பர். எனவே தர்ன் தலைப்பில் உணர்தல் என்ற சொல் இடம் பெற்றது. உணர்தலுக்கும், அறிதலுக்கும் உள்ள இடைவெளியை

உணர்ந்தோரே சிறந்த அறிஞர் ஆவார். (இன்றைய நிலை உணர்வாரும் இலர், அறிவாரும் இலர் என்பர்) அனைத்து மனிதர்களும் பேயாய் - பிணமாய்த் திரியும் என்பர். மனிதப் போலிகள் எவ்வளவு சொன்னாலும் உணரா என்பதால் அறிஞர்கள் முயற்சியைக் கைவிடக் கூடாது.

## 2. திருக்குறளின் நோக்கம் கருத்தினை அறியத்தக்க வழிகள்

திருக்குறளின் நோக்கம் அல்லது நோக்கு என்னும் மையக் கருத்துக்களை அறியும் முன் நாம் சில சார்புகளைக் காணுதல் வேண்டும். அவையாவன 1.காலச்சார்பு 2. சூழல்சார்பு 3. பொருட்சார்பு 4. காமச்சார்பு 5. இனச்சார்பு 6. அறிவுச்சார்பு 7. முடிந்த முடிவுச்சார்பு 8. சமயச்சார்பு 9. நம்பிக்கைசார்பு 10. தூயமெய்யறிவுச்சார்பு என்பனவாம். (மேலும், பல சார்புகள் இன்றைய மனிதனைப்பிடித்த பேய்களாக இருக்கலாம். சின்ன பெரிய திரைச்சார்பு, விதிச்சார்பு, அறிவியல்சார்பு என்றும் அமையலாம்) "மனிதன் சூழ்நிலையின் கைதி" என்று பேரறிஞர் கூறியதையும், "மனிதன் சார்ந்ததன் வண்ணமாகும் விலங்கு,' என்று உளவியல் கூறுவதையும் நினைக்க இந்தச்சார்பு நிலைகளே உலகிடை நடக்கும் அத்துணை கேடுகட்டும் நன்மைக்கும் காரணம் என்பதையும் இவையே ஆக்க அழிவுகட்கு அடித்தளம் என்பரைதயும் அறிதல் வேண்டும். மெய்யியலும் இதனையே உணர்த்தும். திருக்குறளில் சார்பு பற்றிய குறள் ஒன்று உண்டு. அதனை இங்குக்காண்யோம். "சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்று அழித்துச் சார்தரா சார்தகு நோயில்" (359) என்பதே அக்குறள். இதில் நான்கு சார்புகள் வரக்காண்க. முதலில் சார்பினை உணர்க, பின்னர் சார்பு முற்றிலும் கெட்டிடச் செய்க்; அதற்கு ஒழுக்கம் (அறிவு ஒழுக்கம் வேண்டும்) கொள்க. அப்படிமெய்யறி ஒழுக்கம் வாய்ப்பின் அழிவுதரும் சார்பு நோய் என்றும் சார்தரா எனல் காண்க. எனவே, மாந்தன் சார்பால் கெட்டது போதும் என்பதை உணர்ந்து அறிதல் வேண்டும். இன்றைய செயற்கை அறிவியல் சார்பின் கேட்டினையும், அழிவினையும் உணர்ந்து அறிக. திருக்குறலே இதற்க மாற்று மருந்தாக "செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்" என்று ஆணையிடக் காண்க. செயற்கை என்றும் இயற்கையைக் கெடுப்பதாக இருக்கக் கூடாது என்பதையும் உணர்க. சார்பு நோயே இன்றைய கேடுகட்கு எல்லாம் காரணம் என்பதை உணர்ந்து சார்பினை அழிக்க அறிவாயுதம் எடுக்க என்பதைக் காண்க. "அறிவு அற்றம் காக்கும் கருவி" "அறிவுடையார் எல்லாம் உடையார்," என்பதை உண்மையாக்க வேண்டும்.

அதற்காகத் திருக்குறளின் மையக் கருத்தினை - நோக்கினை அறியத்தக்கக் கோட்பாடுகளைக் காண வேண்டும். அவையாவன,

1. அறவியல் கோட்பாடு
2. பொருளியல் கோட்பாடு
3. காமவின்பக் கோட்பாடு
4. கடவுள் கோட்பாடு
5. ஊழியல் கோட்பாடு
6. பண்பியல் கோட்பாடு
7. அறிவுக் கோட்பாடு (ஆற்றல் கோட்பாடு)
8. சமயஞ்சாராக் கோட்பாடு (இயல்புக் கோட்பாடு)
9. தெய்வநலக் கோட்பாடு (மாந்தவளக் கோட்பாடு)
10. மெய்யுணர்வுக் கோட்பாடு (மெய்யறிவுக் கோட்பாடு)

மேற்காட்டிய அடித்தளக் கோட்பாடுகளின் மேல் கட்டப்பட்ட மாளிகையே திருவள்ளுவரின் முப்பால் மாளிகையாகும். அவர்தம் நோக்கம் மாந்தநலம் - மாந்தவளம். இவையே குறள் தோன்றக் காரணமாகிய அடித்தள நிலைகள். நாம் இவற்றைச் செம்மையாகக் கணித்தல் வேண்டும் (கணித்தல் என்பது ஓகுசெய்வதாகும், ஓகு = யோகம் அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்ப அறிவுடைமை வாய்க்கும். அதுவும், நடுவுநிலையோடு அமையின் மெய்யறிவுச் சான்றாண்மை ஆகும்.

திருக்குறளின் அடித்தள முன்னுரைகளாகிய முதல் நான்கு அதிகாரங்கள், இல்லறம், துறவறம், ஊழியல், பொருட்பால் முழுமையும், காமத்துப்பால் யாவும் ஊடுருவியுள்ள - ஊகு - கதிராகவுள்ள உள்பொருளை நாம் அறிதல் வேண்டும். அறியின் குறளின் பொது நோக்கு - மாந்தவள நல நோக்கு அறியப்படும்.

## நோக்கு என்பதன் விரிபொருள்

*"மாத்திரை முதலா அடி நிலைகாறும்*
*நோக்குதற் காரணம் நோக்கு"* எனப்படும் (தொல் - 1361)

இதனால் அனைத்தையும் முற்ற முடிய நோக்கி அறிவதே நோக்கு என்பது பெறப்படும். அதாவது முழுமையான, முற்ற முடிந்த, ஆடி அகலமான, திட்ப நுட்பம் செறிந்த பார்வையே, ஆய்வுப் பார்வையே நோக்கு எனப்படும்.

இன்று குறளினை அவ்வண்ணம் பாராத குறுமதியோரே அதனைச் சமயச்சழக்கில் வீழ்த்துவர். அடிமை மனம். கொண்டோர் அடிமைப்படுகுழி வீழ்த்த முனைவர். ஆனால் குறளின் பொது நிலை அறிந்த எவரும் வீழார்.

நூலாசிரியனின் அடிமன எண்ணங்களே நூலாக்கம் பெறும். எனவே, அடிமன உணர்வுகளை உணர்தல், அடிமன ஆழம் அறிதல். அடிமன நிலைக்களம் தெளிதல் என்ற வழி நாம் உளவியல் கொண்டும் மாந்தவள நலநோக்குக் கொண்டும் திருக்குறளை அறிதல் வேண்டும்.திருக்குறள் கூறும் 18 வகையான மனிதர்களையும் நாம் அறிதல் வேண்டும். (1. பிணம், 2. பேய், 3. களர், 4.பதடி, 5.விலங்கு, 6.மரம், 7.மரப்பாவை, 8. சிறியர், 9.கயவர, 10.நீத்தார், 11.அறவோர், 12. ஆன்றோர், 13.அந்தணர், 14.சான்றோர், 15.பண்பாளர், 16.பெரியார் 17.குடிசெய்வர், 18.வினை ஆள் வோர் (குறிப்பறிவோர்)

மனிதனின் மனம், நெஞ்சம், உள்ளம் மூன்றையும் மனித இயல்புகளான விழைவு (விருப்பம்), அறிவு (ஆற்றல்), செயல் (திட்பநுட்பம்) அறிதல் வேண்டும். இவையாவும் அறிந்து அழிவற்ற மனிதவளம் போற்றவேண்டும். உள்ளம் என்பதே உயிரியக்கமூலம் எனக்காணல் வேண்டும்.

திருக்குறளின் மையக்கருத்து - நோக்கு : 1. உயிர் நிறைஅறம் 2.பொருட்படுத்த வேண்டிய பொருள் 3.உள்ளம் நிறைந்த, உடல் வாழ்வின் நிறைவில் பெறும் மெய்யறிவுக்காமம், மற்றும் இந்த நீன்றின் ஊடுபொருளாகவுள்ள மாந்தவளநலம் ஒன்றே திருக்குறளின் மையக்கருத்து என்பதை நாம் அறிதல் வேண்டும். இவற்றை வெளிப்படுத்தும் அகச் சான்றுகளாகிய குறட்பாக்கள் யாவை என்பதையும் நாம் தெளிதல் வேண்டும்.

1. மனத்துக்கள் மாசிலன் ஆதல் அறம் (34)
2.அறத்தான் வருவதே இன்பம் (39)
3. சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறம் (31)
4. அறத்தின் ஊங்கு ஆக்கம் இல்லை (32)
5.செயற்பாலது அறனே (40)

என்னும் அடித்தளத்துடன்,

6. அன்பும் அறனும் இல்வாழ்க்கை (45)
7. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை (49)

8. வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் (50)
9. பெய் எனப் பெய்யும் மழை - மனைவி (65)
10. மாநிலத்து மன்னுயிர்க்கு இனிது (68)
11. அன்பின் வழியது உயிர்நிலை (80)
12. விற்றுக் கோள் தக்கது - ஒப்புரவு (220)
13. பொருள் ஆட்சி - அருள் ஆட்சி (252)
14. தவத்திற்கு உரு (261)
15. பொய்யா விளக்கே விளக்கு(298)
16. காமம் வெகுளி மயக்கம் - நோய்(360)
17. வஞ்சிப்பது அவா (366)
18. உண்மை அறிவே மிகும் (323)
என்பன வற்றையும் முதல் நிலையாக்கி,
19. கேடில் விழுச்செல்வம் கல்வி (400)
20. நுண்பொருள் காண்பது அறிவு (424)
21. பெருமைக்கும் சிறுமைக்கும் - கருமம் (505)
22.வினைவகையான் வேறாகும் மாந்தர்பலர்(514)
23.உள்ளத்து அனையது உயர்வு(595)
24. மெய்வருத்தக் கூலி தரும் (619)
25. சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க (656)
27. திறண் அறிந்து தீது இன்று வருதே பொருள் (754)
28. அலகையா (பேயாக) வைக்கப்படும் (850)
29. ஒருமை மகளிரே போலப் பெருமை (974)
30. பண்புடையார் பட்டுண்டு உலகம் (996)
31. நச்சு மரம் பழுத்தற்று (1008)
32. தெய்வம் மடிதற்றுத்தான் முந்துறும் (1023)
33. உழுதண்டு வாழ்வாரே வாழ்வார் (1033)
34.மக்களே போல்வர் கயவர் (1071)

என்பவைற்றை இரண்டாம் நிலையாக்கிக் கணிக்க வேண்டும். இங்கு ஒரு பெரிய உண்மை புலப்படக் காண்க. மனிதன் சரியாக இருந்தால் உலகம் சரியாக இருக்கும் என்பதே இதனையே அறத்துப்பாலின் முடிவில் வந்த

ஊழியலும்,பொருட்பாலின் முடிவில் நிற்கும் கயமையும் உணர்த்தும். உலகின் அனைத்துக் கேடு கட்டும் மனிதனே என்பதை இன்றும் நாம் கண்முன் காணுகின்றோம். எனவே மனிதம் செம்மை பெற வேண்டும் என்பதே திருக்குறளின் நோக்கு. அதற்கான முதற்கருவி அறம் துணைக் கருவிகள் காமப் பொருள் என்பனவாம். காமம் மனத்தின் நிறைவானதால் அதனைக் கூறவியல் மெய்யியல் அடித்தளத்தில் ஆய்தல் வேண்டும்.

காமத்துப் பாலின் கீழ்க்கண்ட ஒரு குறள் போதும் இன்றைய மனிதனின் கேடுகாட்ட. அக்குறளாவது,

*"மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்*
*செவ்வி தலைப்படுவர்* (1289)

மக்களில் மிகமிகச்சிலரே மக்கள் என்னும் தகுதிவாய்ந்தவர் என்று இக்குறள் கூறக் காண்க. ஈராயிரம் அண்டுக்கு முன்னரே இந்நிலை எனின் இன்றைய இழி நிலையைக் கூறல் வேண்டா. இன்று மனிதம் அழிவின் விளிம்பில் உள்ளதன் காரணம் இதுவே எனக் காண்க. காமம் ஒன்றா பலவா? பெண்காமம்,போதைக் காமம், பேதமைக்காமம், வெற்று ஆரவார வெகுளிக்காமம், மயக்கக்காமம், அறியாக்காமம், என்று இன்று மக்களை ஆள்வதே காமம் என்று அறிக. எனவே, காமத்தை வெல்ல மனிதம் தெய்வ நிலை பெற வள்ளுவம் வழி கண்டது. அதன் மெய்யியல், உளவியல் அறியின் உலகம் உச்சி மீது வைத்துத் திருக்குறளைப் போற்றும்.

*"தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால்*
*அம்ம அரிவை முயக்கு (1107)*

இங்கு தான் தலைவியிடம் பெற்ற இன்பம் சமூக இன்பமாக - மன்பதை இன்பமாக – அறத்தின் இன்பமாக மடைமாற்றம் பெற்றிடக் காண்க.

மேலும், *"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்*
*வகை தெரிவான் கட்டே உலகு"* (27)

என்று ஐம்புல நோக்கம் கூறியவர் அவற்றின் பயிற்சிக்களம் வாழ்க்கைத் துணையே எனலும் காண்க.

*"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்*
*ஒண்டொடி கண்ணேயுள"* (1101)

என்ற குறளையும் காண்க. மெய்யியல் தவம் உணர்த்துபவள் ஒருமனம் படைத்த பெண்ணே. என்ற உண்மையும் காண்க.

*ஐந்து புலன்களும் நிறைய அவை அவியும்*
*ஐம்புலன் அவிய அன்பும் அருளும் நிறையும்*
*அன்பும் அருளும் நிறைய ஒப்புரவு ஓங்கும்*
*ஒப்புரவு ஓங்க ஈகை இன்பம் வளரும்*
*ஈகை யின்பம் சிறக்க மனிதம் மாண்புறும்*
*மனிதன் மாண்படையத் தெய்வநிலை பெறுவான்*

இவ்வாறு உலகினில் அன்றும் இன்றும் என்றும் மனிதனைத் தெய்வமாக்க வந்தவர் திருவள்ளுவர் ஒருவரே என்பதையும் உள்ளத்துள் நினைக்க இவ்வாறு திருக்குறளின் உயிர், மையக் கருத்து, நோக்கம் மனிதன் தெய்வநிலை பெற்று மண்ணை விண்ணுலகம் ஆக்க வேண்டும். என்பதேயாம். அறம், பொருள், இன்பம் யாவும் மனிதம் வாழ்வாங்கு வாழ்ந்து வளம் பெற்றுத் தெய்வநிலை பெறவேயாம்.

## முடிவுரை

வாழ்வின் வான் பயன் என்ன வென்று தொல்காப்பியம் கூறும் போது "சிறந்தது பயிற்றல்" என்று கூறும் மெய்யறிவும் மாந்தவளநல உயர்வுமே சிறந்தது பயிற்றல் ஆகும். உலக மெய்யியல் யாவும் இன்று கூறும் இக்கருத்தே தொல்லாசானின் கருத்தாகும். திருள்ளுவரின் கருத்தும் அதுமே என்பதை இங்கு நாம் கண்டோம். அறம் பொருள், இன்பம் யாவும் மாந்த வளத்துக்கும் நலத்துக்கும் என்பதை இக்கட்டுரை காட்டும். எனவே, திருக்குறளின் அகப்புற ஆட்சியும் மாட்சியும் யாதம் அறம், பொருள், இன்பமே யாம் அதாவது மாந்த ரேய ஒருமையும் ஒப்புரவும் உள்ளம் கலந்து உயிர்கலந்து இனிக்கின்ற இன்ப அன்பு மேயாம். எனவே, இம்மையக் கருத்துக்கு மாறுபட்டனயாவும் திருவள்ளுவர் ஏலாதன என்பது அறியப்படும் பேருண்மையாகும்.

# வழங்கலும் துய்த்தலும்

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற முழுங் முரசுடைச் செல்வம் – தழங்கருவி வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றோ நாய்பெற்று தெங்கம் பழம்? – பழமொழி நானூறு இப்பாடவே இக்கட்டுரைக்கு வேரும் நீரும் ஒளியுமாகும்.

## பணமா? மனமா?

கொடைக்கு அடிப்படை பணம் அல்லது செல்வம் எனினும் சிந்தனைத் தேர் ஏறிக் கண்டால், 'பணம்' என்பதனை, 'மனம்' முந்திநிற்கும் காட்சி, கண்ணில் தெரியும்.

அதனால் தான் திருமூலர், 'யாவர்க்குமாம் உண்ணும்போ தொருகவளம்' எனும் ஒற்றை வரியிலேயே ஒரு பேருண்மையைப் படம் பிடித்துக்காட்டினார். "வேளாளன் என்போன் விருந்திருக்க உண்ணாதான்" எனும் வரியும் இத்தொனியே.

இதனை அறியாமல் உறங்கிக் கொண்டிருந்தவர்களைச் செல்லமாக இரண்டுதட்டு (வரி) கொண்டெழுப்பினார் வான்புகழ் வள்ளுவனார்.

"ஈத்தவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்."

## ஈதலா? வேதலா?

இன்பத்தைப் பகிர்ந்துகொண்டால் இரண்டு மடங்காகும்; துன்பத்தைப் பகிர்ந்துகொண்டால்; பாதியாகும். ஒற்றை ஈதலால், இரட்டைப்பயனுமே, ஒரு சேர நிகழும்!

பசித்தவனின் துன்பம் பாதியாகிறது.கொடை நல்கியவனின் மன இன்பம் இரண்டு மடங்காகிறது! ஆயினும் இச்சமுதாயத்தில், கொடுப்பவனும் கொள்பவனும் மட்டுமா உள்ளனர்? இருவரைச் 'சுற்றி' பலர் உளர். தென்னை மரத்தில் தேள்கொட்டினால், பனைமரத்தில் நெறி கட்டுமோ? யாரோ, யாருக்கோ கொடுப்பதை, அழுக்காறு உடையவன் தடுக்கிறான்.

*"கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉம் இன்றிக் கெடும்"*

என அவனைத்தூர விலக்குவார் திருவள்ளுவர். மணிமேகலை பெற்ற அமுதசுரபி போல ஆதிரை இட்ட முதற்பொருள் போல, பிறரது கண்ணீர்துடைக்க, வழங்கல்தானே உற்றவழி!

## நீரா? உணவா? மருந்தா?

ஊர்நடுவே உள்ள நன்னீர்க்குளம் போல, பயன்கனிமரம்போல, மருந்துமரம்போல வழங்குதல் வழியில் முன்நிற்கவென, ஒப்புரவு அறிதலில் வழிகாட்டினார் வள்ளுவனார்.

தானத்தில் சிறந்தது அன்னதானம். ஏனெனில் அக்கொடை, கொள்பவரின் குருதியாகவே மாறிப்பயன் விளைக்கும்.

*'பசிப்பிணி மருத்துவன்'* எனப் புரவலனை இரவலர் புகழ்வர்.

## பாடலும் குறிப்பும்

நல்லறம் விழைவோர் இக்கட்டுரையின் தொடக்கத்திலுள்ள பாடலின் நுட்பம் அறிதல் தகும்.

மையக்கருத்து: 'தான் பெற்ற செல்வத்தைக் கொடையாக வழங்கவும், தானே பயன்படுத்தவும் வேண்டும். இன்றேல் அச்செல்வம், நாயினால் வறிதே காக்கப்படும் முற்றிய தேங்காய் போல வீணாகிவிடும்!

விளியாக அமைந்த வரிநுவல் நுட்பம்: "அருவிநீர் பொங்கி வீழும் சமயம், மூங்கில் தான் நீரின் பயன் துய்த்து, வேரூன்றி வளர்ந்துநின்று, பின்னரே முத்துகளைப் பிறருக்கு வழங்கிப்பயன் தரல்போல, ஒருவர், முயற்றியாலும் உழைப்பாலும் பொருள் ஈட்டிச் சேமித்துப் பிறருக்குக் கொடை வழங்குக!

நிற்பவர்தாமே விழுந்தவருக்குக் கை கொடுத்து உதவு முடியும்?

உழைப்பு, சேமிப்பு என்னும் இருதாள் ஊன்றிநின்று, கொடை என்னும் உதவிக்கரம் நீட்டி, இவ்வையகம் உயர்க!

*"கொடை கொடை நற்கொடை ஈபவர் வாழ்வில்*
*நடை உடை பாவனை நன்று!"* - சி.பா.

# உரைவேந்தரும் உரைமரபுகளும்

சி. ஆறுமுகம்
சிங்கப்பூர்

## முன்னுரை

மூல நூலுக்கு உரையெழுதப்புகும் உரையாசிரியர்கள் அந்நூலை விளக்கம் செய்வதற்காக உரை மரபுகளை மேற்கொள்வர். செய்யுட்களை விளக்கி உரைக்கும் மரபுகள் பலவாகக் காணப்பெறுகின்றன. இவற்றைப் பின்வரும் 23 உரைமரபுக் கூறுகளாக டாக்டர் உ.வே.ச. எடுத்துக் காட்டியுள்ளமை நினைவுகூரத்தக்கது. 1. சொற்பெய்துரைத்தல், 2. மாறிக்கூட்டுதல், 3. பழஞ்செய்யுட்பகுதியை உரைநடையாக உரைத்தல், 4. சொன்னடை, 5. மாறுபாடு நீக்கல், 6. சொல்வருவித்துரைத்தல், 7. வகுத்துக்கூறல், 8. கூற்றுவிளக்கல், 9. குறிப்பாலறிந்தபொருள், 10. வரலாற்றுச் செய்திகள், 11. கருத்துரைத்தல், 12. நினைவுறுத்தல், 13. பயனுரைத்தல், 14. பெறப்பட்டவை, 15. இன்னாமைக்குறிப்பு, 16. வழக்கு, 17. மரபு, 18. உவமைகளை விளக்கல், 19.வடசொல்லாட்சி, 20. குறிப்புமொழி, 21. இன்னசிறப்பென்நுரைத்தல், 22. நயங்கள், 23. இலக்கணக்குறிப்பு.

மேலேகண்ட அத்துணைக் கூறுகளையும் ஓர் உரையாசிரியர் தம் உரையில் கையாளவேண்டுமென்பதில்லை. ஏற்புடையனவற்றைக் கொண்டு, புதியனவற்றைப் புகுத்தலாம். இவ்வகையில் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் சங்க அக இலக்கிய (நற்றிணை, ஐங்குறுநூறு) உரைகளில் காணப்பெறும் உரைமரபுகள் சிலவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

## கூடுதல் விளக்கம் தருதல்

சங்கச் செய்யுட்களை விளக்கி, அவற்றுக்குப் பொருள் உரைக்கின்ற போது, பெரிதும் அகராதிப் பொருளாகத் தந்துவிடுதல் மட்டுமே போதியதாக இருப்பதில்லை. அந்த அகராதிப் பொருள், குறித்த செய்யுளில் பயின்று வருகின்ற சொல்லிற்கு எவ்வாறு இயையுடையதாக இருக்கின்றது

என்பதையும் எடுத்துக்காட்டவேண்டிய தேவை உள்ளது. எனவே, சொற்பொருள் விளக்கத்தின்போது, கூடுதல் விளக்கம் செய்துரைப்பதும் ஓர் உரையாசிரியன் உரைர்ந்துள்ளார் என்பதனை அவர் உரைகள் நன்கு உணர்ந்துள்ளார் என்பதனை அவர் உரைகள் நன்கு வெளிப்படுத்துகின்றன.

நற்றிணை 25 ஆவது பாடலில் 'வரும் "செயல்படுமனந்தர் செய்பொருட்கு" என்ற அடிக்கான உரையில்,"செயல்படும் மனம், செய்வினைக்குரிய காலம், இடம், கருவி, வினைவகை முதலியவற்றையே எண்ணும் மனம்" எனக் கூறுகின்றார் உரைவேந்தர்.

உண்மையில் "செயல்படும் மனம்" என்பதற்கு 'எண்ணும் மனம' எனக் குறிப்பதுவே அகராதிப் பொருள்தரும் மரபாகும். ஆனால், இந்தளவில் மட்டும் அமைந்தல் எவற்றை எண்ணும் மனம் என்ற போதிய விளக்கம் வாசகர்களுக்குக் கிடைக்காது எனக்கருதிய ஔவை, "செய்வினைக்குறிய காலம், இடம், கருவி, வினைவகை முதலியவற்றை எண்ணும் மனம்" எனக் கூடுதல் விளக்கத்தை எடுத்துரைத்து, வாசகர்களுக்கு நல்ல தெளிவை வழங்கியுள்ளதைனைக் காணலாம்.

## வழக்கிழந்த சொற்களை விளக்குதல்

சங்க காலத்துக்கும் உரைவேந்தர் உரைசெய்த இருபதாம் நூற்றாண்டுக்கும் இடையே நீண்ட இடைவெளி உண்டு. எனவே சங்கால வழக்கிலிருந்த பல சொற்கள் வழக்கிறந்த சொற்களாகிவிட்டன என்பதே உண்மையாகும். எனவே, அச்சொற்களின் உண்மைப்பொருளைத் தெளிவுறப் படிப்பவர்களுக்கு வழங்கவேண்டிய தேவை உரையாசிரியருக்கு இருப்பதை உணர்ந்த ஔவை, அச்சொற்களுக்கு நல்ல விளக்கத்தைத் தந்து செல்கிறார்.

"குன்றக் குறவன்" எனத்தொடங்கும் ஐங்குறுநூற்றுப்பாடலில், "செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே" என்றொரு அடியில் காணப்பெறும் 'சுணங்கு' என்பதன் பொருளை இக்காலத்தில் அறிய வாய்ப்பில்லை. "காமச் செவ்வி எய்திய மகளிர்க்கு மார்பின்கண் பரந்து தோன்றும் தேமல் சுணங்கு எனப்பட்டது" என உரைவேந்தர் விளக்கவுரை தருவது, தற்காலத்தில் சங்கச் செய்யாட்களைக் கற்போர்க்கு, சுணங்க எனும் சொல்குறிக்கும் பொருளைத் தெளிவாக அறிவிக்கின்றது.

**எடுத்துக்காட்டுத் தருதல் :**

ஒரு பொருள் விளக்கத்தின்போது, அதனை எளிமையாக உணர்த்தும் பொருட்டு, அதேபோன்ற மற்றொரு வழக்கை எடுத்துக்காட்டாகத்தருவது உரைமரபுகளுள் ஒன்றாகும். இவ்வாறு வழங்கும் போது, வழக்கில் பெரிதுமுள்ள ஒரு செய்தியைக் கொண்டு, மற்றைய அரிய சொற்பொருள் விளக்கப்படுகின்றது. மரபு உரையாசிரியர்களின் நெறிகளைப் பின்பற்றும் ஔவை துரைசாமிப்பிள்ளையும் இம்மரபைப் பின்பற்றிக் கூடுதல் விளக்கங்கள் தந்திருப்பதனைக் காணலாம்.

295 ஆவது ஐங்குறுநூற்றுப் பாடலான "வருவது கொல்லோ" எனும் பாடலில் வரும், "புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை" என்ற அடியிற் காணப்பெறும் 'புனவர் எனும் சொல்குறித்த விளக்கவுரையில் உரைவேந்தர், "புனவர் – தினைப்புனமுடையோர்; மருத நிலத்துக் காணியாளர் போல" என்ற விளக்கம் தருகின்றார். இங்கு புனவரை விளக்கம் செய்வதற்காக, மருத நிலத்துக் காணியாளரை எடுத்துக்காட்டாக வழங்கியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

## இருபொருள் தருதல்

செய்யுளின் பொருள் சிறப்புறுவதற்காக, இரண்டு முதலிய பலபொருட்களை வழங்குவதும் உரை மரபாக விளங்கி நிற்கின்றது. இதனால், ஒரே செய்யுள் பல வாசிப்புகளாகக் கற்போர்க்கு வழங்கமுடிகின்றது. அதாவது, ஒரே செய்யுள் அடியானது, வெவ்வேறு பொருள் பொருத்தமுற வழங்கப்பெறும் இடங்களில், வெவ்வேறு கருத்துக்களைக் கற்போர் மனங்களில் விதைத்து விடுகின்றதது. இதனால், பல நுகர்ச்சி அனுபவங்களைக் கற்போர்க்கு ஏற்படுத்துகின்றதெனலாம். இவ்வகையில், ஔவை துரைசாமிப்பிள்ளையும் இரண்டு முதலிய பல பொருட்களை எடுத்துக்காட்டிச் சென்றிருப்பதை அவந்தம் உரைகள் வாயிலாக அறியமுடிகின்றது. "அருளிலர் வாழி" எனத்தொடங்கும் நற்றிணையில் வரும் பாடலில், "களிறகப்படுத்த" என்ற தொடருக்கான விளக்கவுரை : களிறு, ஆண்யானை; காட்டுப்பன்றியுமாம்" என்கின்றார்.

**உள்ளுறை, உவமம், இறைச்சியை விளக்குதல்**

உள்ளுறை, இறைச்சி ஆகிய இரண்டுமே வெளிப்படையாகப் பொருள் தராமல், குறிப்பாலே பொருளைத் தந்து நிற்பன. இதனை நன்குணர்ந்த உரைவேந்தர், இவற்றை எவ்வாறு விளக்குகிறார் என்பதைனைப் பின்வரும் பாடல் கொண்டு அறியலாம்.

"தவறிலராயினும்" எனத்தொடங்கும் 117 ஆவது ஐங்குறுநூற்றுப் பாடலில் வரும்,

*"முண்டக நறுமலர் கமழும்*
*தொண்டியன்னோள் தோளுந்றோரே'*

எனவரும் அடிகளுக்கு,

"நீர் இடையறாது சூழ்ந்த மணற்கோட்டில் நிற்கும் முண்டகம் மலர்ந்து நறுமணம் கமழ்வதுபோல, அரிய காவலமைந்த கடிமனைக்கண் பெருநலம் திகழ்த் தலைமகள் கடிமனைக்கண் பெருநலம் திகழத் தலைமகள் விளக்கமுறுவதும், அந்நறுமணம் கண்டோர் உள்ளத்தைக் கவற்றினும், கொள்ளற்கரிதாயது போல, இவள் நலத்தால் நீ பனித்து வருந்தினும் கொள்ளற்கரியன் எனத்தோழி உள்ளுறையால் அருமை செய்து அயர்வித்தமை காண்க"

என்று உள்ளுறையையும்,

"நறுமணங்கமழும் நெடுங்கோட்டு முண்டகம் ஒருகால் நெருங்கினும் முள்ளுடைமையால் கொளற்கு அரிதாமாறு போல, உடனுறையினும் என்னால் இவளை உடன்படுவித்தல் இயலாது எனத்தோழி கூறியதாக இறைச்சி பெறப்படுமாறு காண்க"

என்று இறைச்சியையும் எடுத்துக்காட்டிட விளக்கிச்செல்வது படித்து இன்புறத்தக்கது.

**காரணம் சுட்டல்**

இயற்கையைப் பாடுவதில் தலைசிறந்து விளங்கியவர்கள் சங்கப்புலவர்கள். அவர்கள் செய்யுட்களில் ஆங்காங்கு வரும் இயற்கைக்கு

முரண்போன்ற செய்திகளை விளக்குமிடங்களில், அவற்றுக்கு நயமான காரணங்களைப் பெய்துரைத்து, செய்யுட்களின் சிறப்பை வெளிப்படுத்துகிறார் உரைவேந்தர். எடுத்துக்காட்டாக,

*"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ*
*வண்டுதரு நாற்றம் வளிகலந்தீய"*

என வரும் நற்றிணையின் 56 ஆவது பாடலின் இரண்டாவது அடியில், " வண்டுதரு நாற்றம்" எனக் கூறியுள்ளார். இது இயற்கை முரணாகும். இதனை,

"இதழ் விரிய எழும் மணத்தை வளி கலந்து எங்கும் பரப்புவது தோன்ற வண்டுதரு நாற்றம் வளி கலந்து ஈய என்றார். இயல்பாக மலர்வதற்குள் வண்டு மலர்வித்து மணத்தை வெளிப்படுத்துவதால் " வண்டு தரு நாற்றம் எனப்படுகிறது." என்று காரணம் காட்டுகிறார் உரைவேந்தர்.

## முடிவுரை

உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை தமது சங்க அக இலக்கிய உரைகளில் கையாளும் உரைமரபுக் கூறுகள் அனைத்தும் மிகச் சிறப்பாக விளக்கம் பெற்று, அவற்றை வாசகன், இக்காலச் சூழலுக்கேற்ப உணர்ந்து இன்புறும் வகையில் நயவுரை கண்டு விளக்கம் தந்துள்ளமை பாராட்டுக்குறியனவாக விளங்குகின்றது.

# சுற்றுச் சூழல்

கவிஞர் அ. கனகசபாபதி, எம்.ஏ., பி.எட்.,

நாம்வாழும் இடம்சுற்றி சுத்தம் செய்து
நன்றாக வைத்திருந்தால் நமக்கு நன்று!
நாமதிலே கவனமுடன் இருப்ப தில்தான்
நற்கரும்பாய் இனிக்கின்ற வாழ்வு கிட்டும்!
பாமரர்கள் தாம்வாழும் இடத்தைச் சுற்றி
பள்ளத்தில் அசுத்தநீரை தேங்க வைப்பார்!
தீமைதரும் ஈகொசுக்கள் அதனில் தோன்றி
துன்பம்தரும் நோய்பரப்பி வருத்தும் நம்மை!

குப்பைகூளம் வீடுசுற்றி குவித்து வைப்பார்!
குழந்தைகளும் மலங்கழிக்கும் வீட்டைச் சுற்றி!
அப்புறப்ப டுத்துவதில் தாம தித்தால்
அதன்மீது ஈமொய்த்து உள்ளே வந்து
தப்பாமல் நமதுணவில் அமர்ந்து கொள்ளும்!
தன்காலில் படிந்துள்ள கிருமி யாலே
அப்போதே நோய்பரவ வழியுண் டாக்கும்!
அதனாலே அடுத்தடுத்து சுத்தம் செய்வோம்!

இறந்தஎலி பெருச்சாளி நாயை யெல்லாம்
எப்போதும் குழித்தோண்டி புதைக்க வேண்டும்!
இறப்புகளைத் தருகின்ற கால ராவும்
இன்னலுரும் வாந்திபேதி விஷச்சு ரங்கள்

வரட்டிருமல் மஞ்சள்கா மாலை நோயும்
வருவதற்குக் காரணமே அசுத்த நீர்தான்!
துரத்திநோயை வாராது தடுப்ப தற்குத்
தூய்மையான நீர் அமையும் சூழல் வேண்டும்

காற்றினிலும் சுவாசிக்க தூய்மை வேண்டும்!
காசநோயும் ஆஸ்த்துமாவும் வராதி ரக்க
காற்றினிலே புகை, தூசும் புழுதி யும்தான்
கலக்காது நம்சூழல் காக்க வேண்டும்!
சோற்றோடு உணவுவகை அனைத்தை யும்நாம்
சுத்தமாக மூடிவைத்து உண்டு வந்தால்
கூற்றுவனும் விரைவினிலே நெருங்கான் நம்மை!
குடும்பங்கள் நோயின்றி வாழும் நன்றாய்!

கிருமிகளை அழிக்கின்ற மருந்தைக் கொண்டு
கீழேநாம் தினந்தோறும் தெளிக்க வேண்டும்!
கிருமிகொல்லி துகள்களையும் தூவி விட்டு
கிருமிகளின் தாக்கத்தை தடுக்க வேண்டும்!
கருப்பொருளாய் இவ்வழியை ஏற்றுக் கொண்டு
கருத்துடனே வாழுமுறை அமைத்துக் கொண்டால்
அருமையுடன் பெருமையுடன் அனைத்துப் பேரும்
ஆரோக்கிய வாழ்க்கையினைப் பெற்று வாழ்வோம்!

# வாசகர் வாசகம் ①

அன்பார்ந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர்,

வணக்கம். செந்தமிழ் அக். 2011 இதழ், ஆகத்து 15 சுதந்திர தின விழாப்படச் செய்தியுடன் தொடங்கி, அத்திங்களிதழ் பற்றிய வாசகர் வாசகத்துடன் நிறைவு பெறுவது நயம். ஈடில்லாக் குறளை ஏந்தும் கவிதையோடு, முத்தான மூன்று கட்டுரைகளும் மிளிர்கின்றன. ..... முசிறி கட்டுரை ஒரு மாணிக்க மணி; படிக்கப் படிக்க, வாசகர் நாற்காலியின் நுனிக்கே வந்தமர்கிறார்; தொடர்ச்சி படிக்க, அடுத்த இதழை ஆவலுடன் எதிர்பார்க்க வைத்து விட்டீர்கள் ! படங்கள் கட்டுரைக்கு மகுடம் ! வாழிய செந்தமிழ் !

சங்கப்பா... கட்டுரையில், எண். 3 பாடல் மேற்கோள்கள் மனத்தை அள்ளுகின்றன! நற்றிணை (303) புலியூர்க் கேசிகனார் தெளிவுரை ( கங்கை ) விளக்கத்தில், இன்றும் நெல்லை மாவட்டத்தில் இவ்வழிபாடு உள்ளதைச் சுட்டிய நயமான செய்தியையும் ஈண்டு நன்றியோடு நினைந்தும் வியந்தும் பாராட்டலாம் !

இதழ்மண வரைவாளர் குறித்தது போல, 'நாடும் மொழியும் கண்கள்' எனப் போற்றும் 'இலக்கியக் கொள்கை' கட்டுரையில், என் மனத்தை மிகவும் கவர்ந்த வரி; 'தமிழ் என்பது ஒரு மொழி மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை வழி' ! குழந்தைப் பருவத்தில், எழுது பலகையில், அழகாக எழுதியமைக்கு 'நன்று' வாங்கிச் சென்றமைக்குத் தாய் பாராட்டியதைப் போன்ற மகிழ்ச்சியை, எனக்குத் தமிழ்ப்பால் ஊட்டி வளர்த்த மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தார் இதழ்மணம் வழி பாராட்டியது கண்டும் அடைகிறேன்!

***தீயன விலகி, நல்லன மலரும்***

***தீபாவளி நல்வாழ்த்துக்கள்***

செந்தமிழ் 28.9.11 அன்று கிடைத்தது. முதல் அட்டை இரண்டாம் பக்கம் வண்ண அச்சில், தமிழ்ச் செம்மல் விருது வென்ற, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திருநிறை இரா. குருசாமி பி.ஏ., அவர்களுக்கானப் பாராட்டுப் பா கண்டு பேருவகை கொண்டேன்; நன்றி.

மதுரை இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் கட்டுரை ஓர் இன்சுவைக் கருத்துக்கூட்டு; அதனை ஒற்றைச் சொல்லியத்தில் இதழ்மணம் அறிமுகம் செய்யும் அழகே அழகு !

மாற்றுத் திறனாளர்க்கான நல்விழைவை ஐ.நா. அறிவித்து, முப்பது ஆண்டுகளாக ஆதரவுக் கரம் பல நீள்வது கண்டு மனங்கள் மகிழும் இவ்வேளையில், அவர்களுக்கு ஆதரவான ஒன்பது இலக்கிய மேற்கோள்களைக் கட்டுரையாளர் சிறப்பாகத் தொகுத்தளித்துள்ளார்.

உத்திகளைப் புதிய கோணத்தில் ஆயும் கட்டுரை சுவையானது. மறைமலையடிகள்... கட்டுரை வழி, 'கந்து' என்னும் சொல்லாட்சி நயம் அறிந்தேன். பெண்ணியம் கட்டுரைக்குத் தலைப்புகளும் மேற்கோள்களும் அணி செய்கின்றன. ஊழ், தலைவிதியன்று எனத் தெளிவாக்குகிறது. திருக்குறள் தொடர், செய்தி, கட்டுரை, தூய தமிழ்ச் சொற்களை ஆளத்தூண்டுகிறது. எளியேனின் வாசகர் வாசகம் வெளியிட்டமைக்கு நன்றி !

இப்படிக்கு

**புலவர் சி. பாண்டுரங்கன் ஆம்பூர்**

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 December 2011 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month.


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை

✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்

✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.